IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.
DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 45/2024

Deposition of witness for prosecution : PW1

Defense :

Name : குப்பம்மாள்

Husband's Name : கிருஷ்டன்

Village : தந்தை பெரியார் நகர், களம்பூர்.

Taluk :

Caste :

Calling : விவசாயம்

Religion :

Age : 65

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.08.2025.

**முதல் விசாரணை**

**எதிரி ஆஜர்.**

1. நான் தற்போது தந்தை பெரியார் நகர், களம்பூரில் வசித்து வருகின்றேன். எனது கணவர் இறந்து 30 வருடங்கள் ஆகிறது. எனக்கு 2 மகன்கள் 2 மகள்கள் ஆவர். என் பெரிய பிள்ளையின் பெயர் முனியப்பன் அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. அவருக்கு 2 மகன்கள் இருக்கிறார்கள். எனது மற்றொரு மகன் ஆஜர் எதிரி லட்சுமணன் ஆவார். எனது மகன் முனியப்பனுக்கு அடிபட்டிருந்தது அவரை நான் தான் அடுக்கம்பாறை வேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்தேன். எனது மகனை யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் யார் மீது புகார் கொடுத்தேன் என்றால் நான் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் இருந்த போது களம்பூர் போலீசார் வந்தார்கள் என்னிடம் கைரேகை மட்டும் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் தாளில் உள்ள கைரேகை என்னுடையது தான். எதற்காக கைரேகை வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி எனது மகன் ஆவார். அவர் மீது தான் வழக்கு நடக்கிறது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. (புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை மட்டும் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

**அரசுதரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அதனை தொடர்ந்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.**

1. 26.06.2022 அன்று நான் சென்னையில் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்ததாகவும் வீட்டிற்கு வந்து பார்த்த போது எனது மூத்த மகன் முனியப்பன் தலையில் அடிபட்டு இருந்ததாகவும் இளைய மகன் லட்சுமணன் வீட்டில் கட்டிலில் படுத்துக்கொண்டு இருந்ததாகவும் நான் என் பெரிய மகன் முனியப்பனிடம் காயம் எப்படி ஏற்பட்டது என்று கேட்டதாகவும் அதற்கு அவர் லட்சுமணன் என்னை தலையில் இரும்பு சட்டத்தால் தலையில் அடித்ததாகவும் உடனே நான் என் பக்கத்து வீட்டில் இருந்த ஜெயசீலன் என்பவரை கூட்டிக்கொண்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் மூத்த மகன் முனியப்பனை அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் சேர்த்ததாகவும் தகவல் கூறிவிட்டு தற்போது எதிரி என் மகன் என்பதால் அவரை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவம் நடந்த போது நான் சென்னையில் இருந்தேன். சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து எனது மகன் முனியப்பனை பார்த்தேன் என்றால் 1 வாரம் கழித்து பார்த்தேன். காயம் பட்ட எனது மகனை யார் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனை அழைத்து சென்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.